


திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி, திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர், முனைவர் க. பொன்முடி எம்.எல்.ஏ வாக்கு சேகரித்தார். உடன் டி.என். முருகன், செல்வராஜ், மு.தங்கம், கு.தீனதயளாளன், பொதுக்குழு உறுப்பினர் ராஜசேகர் , ஒன்றிய நிர்வாகிகள் சுகவனராஜன், ஆனந்தன், வியக்குலின்மேரி, பார்த்தசாரதி , பாலமுருகன், சந்திரசேகர், சிவராமன், ஞானம் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில் செஞ்சி மஸ்தான் வாக்கு சேகரித்தார்!

செஞ்சி, ஏப். 9-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார்.

செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர்விஜயகுமார் தலைமையில் செஞ்சி கிழக்கு ஒன்றியம் அப்பம் பட்டு, கோணை, நாகம் பூண்டி, கோனை புதூர் ஆகிய கிராமத்தில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போதுகோனை புதூர் கிராமத்தில் கிளைக் கழக செயலாளர் நாகராஜ் ஆனந்தி ஆகியோரது மகன் ஜகன்நாதனின் 16 வது பிறந்தநாள் விழா கேக் வெட்டிஉதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.அப்போது பொதுமக்களும் தி.மு.க. நிர்வாகிகளும் கைத்தட்டி பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

தொடர்ந்து வாக்காளர்களிடம் தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ வாக்குசேகரித்து பேசுகையில்:

கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சி நடத்தி மக்களை சிரமத்தில் வைத்தவர் எடப்பாடி பழனிச்சாமி. முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில்ஏழை மக்களுக்கு கலைஞர் கனவு இல்லம் மூன்று லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.அடுத்த 5 ஆண்டுகளில் 10 லட்சம் வீடுகள் கட்டப்பட உள்ளது அடுத்த முறை வாக்கு சேகரிக்க எந்த கிராமத்திற்கு சென்றாலும் கூரை வீடு ஓட்டு வீடுகள் இருக்காது எல்லோரும் கலைஞர் கனவு இல்லத்தில் இருப்பார்கள் இதுதான் கலைஞர் கனவு .

வாக்கு சேகரிக்க எங்கு சென்றாலும் யாருக்கு வாக்களிப்பீர்கள் கேட்டால் ஸ்டாலினுக்கு தான் ஸ்டாலினுக்கு தான் என வாக்காளர்கள் வரவேற்கின்றனர் ஆனால் எடப்பாடியும் மோடியும் பொறாமை பொச்சரிப்பால் உளறிக் கொண்டு பொய் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கலைஞரின் மகன் சொன்னால் செய்வார் என்று எல்லோருக்கும் தெரியும்சொன்னதையும் செய்வோம் சொல்லாததையும் செய்வோம் இதுதான் கலைஞரின் ஆட்சி முதலமைச்சரின் ஆட்சிஎன்று தெரிவித்த திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. ஒன்றிய பா.ஜ.க. அரசு டீசல் பெட்ரோல் கேஸ் விலையை உயர்த்தி உள்ளது.

ஆனால் தமிழ்நாட்டில் உள்ள மகளிர்களுக்கு கலைஞர் ஆட்சியில்கேசை இலவசமாக வழங்கினார். அவர் வழி ஆட்சி செய்யும்

தமிழ்நாடு முதலமைச்சர் தற்போது தி.மு.க. தேர்தல் அறிக்கையில் பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அறிவித்துள்ளார். இத் திட்டங்களை மீண்டும் செயல்படுத்துவதற்கு

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி மீண்டும் தொடர்வதற்கும் வாக்காளர்கள் ஆகிய நீங்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் , மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் ரங்க பூபதி, வட்டாரத் தலைவர் சக்திவேல் பலப்பட்டு சண்முகம், சூரியமூர்த்தி,கோனை ராஜா, தேமுதிக மாவட்ட பொருளாளர் தயாநிதி, சாரங்கபாணி, பிரபு, விசிக மாவட்ட செயலாளர் சிவா, ம.தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் தேனன், மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், தி.மு.க. ஒன்றிய நிர்வாகிகள் வாசு, ஆறுமுகம், அய்யாதுரை, இக்பால், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரேவதி கணேசன், ஊராட்சி மன்ற தலைவர் பிருந்தா சக்தி முருகன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பழனி, ஊராட்சி நிர்வாகிகள் அப்பம்பட்டு காந்தி, வெங்கடேசன், ரவி, முத்து, முரளி கிருஷ்ணன், வசந்த் கோணை பாலமுருகன், தினகரன், ஏழுமலை, தனபால், லூர்து, நாகம்பூண்டி அல்லி முத்து, ராமு, சங்கர், கோணைபுதூர் நாகராஜ், மூவேந்தன், வெண்ணி, பெருமாள், உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. சார்பில் போட்டியிடும் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கோணை ஊராட்சி அப்பம்பட்டு மற்றும் கோணைபுதூரில் தி.மு.க. கிளைக் கழக செயலாளர் நாகராஜ் மகன் பிறந்தநாள் விழாவில்பிறந்தநாள் கேக் வெட்டி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

## எங்கும் ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது!

# உதிப்பது உதயசூரியன்தான்: சீர்காழியில் ஒலித்த மக்களின் குரல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘டிவிட்டர்’ பதிவில் நெகிழ்ச்சி!

சென்னை, ஏப்.9-

“எங்கும் ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது. உதிப்பது உதயசூரியன் தான். சீர்காழியில் ஒலித்த மக்களின் குரல்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

**அண்ணன் வைகோ அவர்களின் ஆதரவு பெற்ற ம.தி.மு.க. வேட்பாளர் செந்தில் செல்வன் அவர்களுக்கு ஆதரவாக இன்று காலை ஒன்றரை மணி நேரம் சீர்காழியின் வீதிகளில் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தேன்.**

**எங்கும் திராவிட மாடல் ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது.**

**திராவிட மாடல் அரசின் திட்டங்களை நான் கூறுவதற்கு முன், மக்களே என்னிடம் சொல்லி மகிழ்கிறார்கள்.**

**சீர்காழியிலேயே அவரவர் பகுதிகளில் எத்தனை திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என என்னை உரிமையோடு நிறுத்திச் சொல்கிறார்கள்.**

**இதைவிட வேறென்ன வேண்டும்! மீண்டும் கழக ஆட்சியே!**

**#வெல்வோம்_ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மாடசாமி ஏற்பாடு! தென்காசி கழக வேட்பாளர் கலை கதிரவனுக்கு ஆதரவு!

# அ.தி.மு.க. பா.ஜ.க. நிர்வாகிகள் 25 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை முன்னிலை! பொ.சிவபத்மநாதன் பங்கேற்பு!

தென்காசி.ஏப்.9-

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் நல்லாட்சி மீண்டும் தொடர தென்காசி தெற்கு மாவட்டம் குலையநேரி ஊராட்சி கிளைச் செயலாளர் மாடசாமி ஏற்பாட்டில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை முன்னிலையில் தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவனை ஆதரித்து அ.தி.மு.க. பா.ஜ.க. நிர்வாகிகள் 25 க்கும் மேற்பட்டோர் அக்கட்சிகளில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ. சிவபத்மநாதன் பங்கேற்றார்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் ஐந்தாண்டு காலம் சிறப்பாக நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியில் எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் அனைத்து திட்டங்களும் கிடைக்க பெற்று தமிழக மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடனும்,உற்சாகத்துடனும் கவலைகளை மறந்து நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர்.தற்போது திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் தி.மு.க. தேர்தல் அறிக்கை சூப்பர் ஸ்டார் அறிக்கையாக அமைந்துள்ளது. இதனை தெரிந்துகொண்டு மாற்றுக் கட்சியினர் தொடர்ந்து கழகத்தில் தங்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு நடந்து வருகிறது.

அதன்படி தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குலையநேரி ஊராட்சி கிளைச் செயலாளர் மாடசாமி ஏற்பாட்டில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை முன்னிலையில் தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவனுக்கு ஆதரவு தெரிவிக்கும் அடிப்படையில் குலையநேரி ஊராட்சி இரட்டைக்குளம் நாட்டாமை முருகன் தலைமையில் ஊராட்சி உறுப்பினர்கள் மனோகரன்,ராஜ் என்ற யோகநாதன், குமார், ஆறுமுகம், தேவேந்திரன், சமுத்திரம்,வைரசாமி, ராமராஜ்,செல்வம்,கணேசன்,பிரசாத், தேவா,ராமச்சந்திரன்,மயில் முருகன், ராமச்சந்திரன்,வேலாயுதம் உள்பட 25 க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.பா.ஜ.க. வினர் அக்கட்சிகளில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ. சிவபத்மநாதன், ஆனைகுளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கலீல்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் திருமலை குமார், சுப்பையாபுரம் திருமலைக்கனி, ஒன்றிய கவுன்சிலர் சங்கர், மாவட்ட பிரதிநிதி துரைப் பாண்டியன்,மேலநீலித நல்லூர் முன்னாள் வட்டார காங்கிரஸ் தலைவர் மாணிக்கம்,ஹரிச்சந்திரன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஹரி கிருஷ்ணன், அசோக் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை குலையநேரி கிளை செயலாளர் மாடசாமி செய்திருந்தார்.

## சிவகங்கை தெற்கு தொகுதியில்

# நடிகர் கருணாஸ் 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பு!

## நரிக்குறவர்கள் பாசிமாலை அணிவித்து நடனமாடி வரவேற்பு!

சிவகங்கை. ஏப். 9-

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் சிவகங்கை சட்டமன்ற தொகுதியில் முக்குலத் தோர் புலிப்படை தலைவர் நடிகர் கருணாஸ் போட்டியிடுகிறார்.

இவர் நேற்று சிவகங்கை தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட காட்டு குடியிருப்பு, பையூர், பழமலை நகர், நரிக்குறவர் காலனி, சமத்துவபுரம் அண்ணாநகர் ,வல்லனி,அண்ணாமலை நகர் கண்டனி , வண்ட வாசி, கூத்தாண்டன், வாணியன் குடி வேம்பங்குடி உட்பட100க்கும் மேற்பட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரித்தார்.

பையூர் பழமலை நகர் நரிக்குறவர் காலணியில் வேட்பாளர் நடிகர் கருணாஸிற்கு நரிக்குறவர்கள் பாசி மாலை அணிவித்து நடனமாடி வரவேற்பளித்தார்கள். சென்ற இடங்களில் எல்லாம் நடிகர் கருணாஸ் வாக்கு சேகரித்து பேசியதாவது.

கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நான் போட்டியிடுகிறேன் . இந்த தொகுதி எனக்கு ஒன்றும் புதிது அல்ல. நான் இங்கே பத்து ஆண்டுகளுக்கு மேலாக சிவகங்கை யில் வசித்து வருகிறேன் .நான் வெற்றி பெற்றதும் இத்தொகுதிக்கு நிறை வேற்றப்பட வேண்டிய தேவைகள் அனைத்தையும் முதல்வரிடம் நேரில் சென்று பேசி நிறைவேற்றி வைப்பேன். உங்களில் ஒருவனாக இருந்து உங்களுக்கு உழைப்பதற்கு எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கழகத் தலைவர் தளபதி அவர்களின் சாதனைகள் தொடர வேண்டும் எனவே எனக்கு வாக்கு அளித்து வெற்றி பெறச் செய்திட வேண்டும்.

இவ்வாறு வேட்பாளர் நடிகர் கருணாஸ் பேசினார்.

வேட்பாளருடன் தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் , பொதுக்குழு உறுப்பினர் ஏ.இ.ஆர்.சுரேஷ்,கல்லல் கே ஆர். அசோகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி, மதிவாணன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் கோவிந்தன் மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் மார்க்கரெட் கமலா, தமிழ் தேசம் தியாக ராஜன், அழகர்சாமி, மாவட்ட ஆதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் சிங்கமுத்து, கூட்டணி கட்சி நிர்வாகிகள் மனோ ,சங்கர், சுரேஷ், எஸ்.சுந்தர் ராஜன், நம்பி, ஜெயபாலன், முருகன், இளைஞரணி தங்கம் , பொன்னம்பலம் சி.பி.எம். சங்கர் உட்பட கூட்டணி கட்சியினர் சென்றார்கள். சென்ற இடங்களில் எல்லாம் வேட்பாளர் நடிகர் கருணாஸிற்கு பெண்கள் ஆரத்தி எடுத்தும் நரிக்குறவர்கள் நடனமாடியும் வரவேற்பளித்தார்கள்.



திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவு பெற்ற, கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தா.உதயசூரியன் சங்கராபுரம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட ச.செல்லம்பட்டு கிராமத்தில் தேநீர் கடையில் தேநீர் ஆற்றி பொதுமக்களிடம் நூதன முறையில் உதயசூரியன் சின்னத்தில் தீவிர வாக்கு சேகரித்தார், அப்போது கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உடன் கலந்துகொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மேற்கு நகர கழக அலுவலகத்தில், விழுப்புரம் ஒருங்கிணைந்த நகர தேர்தல் பணிமனையை திறந்து வைத்தார். உடன் மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர் இரா.ஜனகராஜ், நகர கழக பொறுப்பாளர்கள் இரா.சக்கரை, எஸ்.வெற்றிவேல், நகர்மன்ற தலைவர் தமிழ்செல்வி பிரபு மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள்,நகர பொறுப்புக்குழு உறுப்பினர்கள், வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.